**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075256

C

1. District : மாவட்டம் VELLORE PS: காவல்நிலையம் V&A.C VELLORE Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 19/2020 Date: நாள் 12.12.2020

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION Sections பிரிவுகள்: 7 AND 12 OF P.C
(ii) Act சட்டம்: ACT 1988 AS AMENDED Sections பிரிவுகள்: (AMENDMENT) ACT 2018
(iii) Act சட்டம்: BY P.C (AMENDMENT) ACT 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 11.12.2020 Date to : நாள் வரை 12.12.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 08.00 HRS Time to : நேரம் வரை 04.00 HRS.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.12.2020 AND 12.12.2020 Time : நேரம் 23.30 HRS AND 17.30 HRS
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOl-II Time : நேரம் 11.12.2020 AT 23.30 HRS 12.12.2020 AND 18.00 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக TAMIL COMPUTER TYPED.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் R.T.O CHECK POST.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி KATPADI, VELLORE DISTRICT 11 KM NORTH
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. JOTHI (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் SAMPATH
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 1965 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் DEPUTY INSPECTION CELL OFFICER (g) Address : முகவரி OFFICE OF THE DISTRICT INSPECTION CELL, VELLORE COLLECTORATE, VELLORE.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
① Tr. S. RANIKANNAN (A5/2020) S/O. SURULIVEL MOTOR VEHICLE INSPECTOR (M.T) CHECK POST, R.T.O, KATPADI, VELLORE. ② Tr. S. BABU (50/2020) S/O. SAMPATH, B-M-3 PHASE-III 6th STREET, SATHUVACHARI, VELLIAR, VELLORE.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
NO DELAY

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERAT SHEET ATTACHED.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 12/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature]

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.12.2020
18.30 HRS.

Name: பெயர் S. VIJAY
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் ..........
VIGILANCE AND ANTI CORRUPTION, VELLORE.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.</u> இன்று 12.12.2020-ஆம் தேதி 17.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த திரு.S.ஜோதி, மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் என்பவரின் புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: வேலூர் 12.12.2020 அனுப்புநர் S.ஜோதி, மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அம்மையீர், நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலராக உள்ளேன். நேற்று 11.12.2020-ஆம் தேதியன்று இரவு சுமார் 10.15 மணியளவில், வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுக்கா, காட்பாடியில் உள்ள போக்குவரத்து துறை சோதனை சாவடியில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.S.ராம்கண்ணன் என்பவர் சோதனை சாவடியை கடந்து செல்லும் கனரக வாகனங்கள், பிற மாநில வாடகை வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களில் வாகன உரிமையாளர்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடம் நேரிடையாகவும் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் அதிகாலை நேரங்களில் பெருமளவு தொகையினை கட்டாயப்படுத்தி அதிகமாக பணத்தை லஞ்சமாக வசூல் செய்வதாகவும், மேலும், அவ்வாறு வழங்க மறுப்பவர்களின் வாகனங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்தும் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு இடையூறு மற்றும் அலைகழிப்பு ஏற்படுத்துவதாகவும், மேலும் தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நடைபெறும் விதிமீறல்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் பெருமளவு தொகையினை லஞ்சமாக பணத்தை பெறுவதாக வந்த தகவலின் பேரில், கிடைக்கபெற்ற தகவலை நம்பகமான தகவலாளர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு 11.12.2020 ந்தேதி

இரவு சுமார் 11.30 மணியளவில் தெரியப்படுத்திய பின் 12.12.2020-ஆம்தேதி அதிகாலை 03.15 மணியளவில் நானும், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.S.விஜய் மற்றும் குழுவினருடன் புறப்பட்டு மேற்படி காட்பாடியில் உள்ள போக்குவரத்து துறை சோதனை சாவடியிடம் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ள காலை 04.00 மணிக்கு காட்பாடி போக்குவரத்து துறை சோதனை சாவடிக்கு சென்றடைந்து அப்போது சோதனை சாவடியில் திரு.S.ராம்கண்ணன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ) மற்றும் அவரது குழுவினரான மூன்று நபர்கள் பணியில் இருந்தனர். மேற்படி சோதனை சாவடியில் பணியில் இருந்த அலுவலர்களிடம் நானும் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, தங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்று சுயபரிசோதனை செய்து காண்பித்தபின்னர் கொரானா நோய் தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு திரு.S.ராம்கண்ணன் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாதவர்) அவர்களை விசாரிக்க அவர் 11.12.2020 ந்தேதி காலை 08.00 மணி முதல் 12.12.2020 ந்தேதி காலை 08.00 மணிவரை 24 மணி நேர பணியில் உள்ளதாக தெரிவித்தார், அவரை சோதனையிட வலதுபுற பேண்ட் பாக்கெட்டில் பணம் ரூ.3,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து விசாரிக்க, அவர் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாகவே இருந்தார். எனவே தக்க முகாந்திரம் மற்றும் விளக்கம் கூற இயலாத அப்பணம் ரூ.3,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனை சாவடியில் இருந்த திருமதி.அமீர்தம் க/பெ.(லேட்) A.ராமசாமி, அலுவலக உதவியாளர் அவர்களின் கைப்பையை சோதனை செய்து அவர் வசம் இருந்த ரூபாய் 480/-ஐ குறித்து விசாரிக்க தன்னுடைய சொந்த செலவுக்கு வைத்திருந்தபணம் என்று கூறியதால் அப்பணம் அவரிடமே திருப்பிகொடுக்கப்பட்டது. மேலும் சோதனை சாவடியில் இருந்த திரு.S.பாபு, த/பெ.(லேட்) சம்பத் என்றற நபரை சோதனை செய்ய அவர் சட்டையின் மேல்புற பாக்கெட்டில் பணம் ரூபாய் 3000/- இருந்தது, தக்க

முகாந்திரம் கூறாததால் வழக்கு நிமித்தம் அத்தொகை கைப்பற்றப்பட்டது. கணினியில் அமர்ந்து பணி செய்துகொண்டிருந்த A.R.நித்தியானந்தன் த/பெ.ராஜகோபால், BM-3 பகுதி-III, 6-வது தெரு, சத்துவாச்சாரி, வள்ளலார், வேலூர் மாவட்டம் என்ற தனி நபரை சோதனை செய்ய அவர் சட்டையின் மேல் பாக்கெட்டில் இருந்த ரூபாய் 150/-ஐ குறித்து விசாரிக்க தன்னுடைய சொந்த செலவுக்கு வைத்திருந்தபணம் என்று கூறியதால் அப்பணம் அவரிடமே திருப்பிகொடுக்கப்பட்டது. மேலும் காட்பாடி போக்குவரத்து துறை சோதனை சாவடியில் 1) திரு.ராம்கண்ணன், 2)திரு.முத்துக்குமார், 3)திரு.நடராஜன், 4)திரு.ரமணன் ஆகிய 4-மோட்டார் வாகன ஆய்வாளர் (தெ.நு.அ) மற்றும் 1)திருமதி.அமிர்தம், 2)திரு.சத்தியநாதன் ஆகிய இரண்டு அலுவலக உதவியாளர்கள் பணிபுரிந்துவருகின்றார்கள். திரு.ராம்கண்ணன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாதவர்) 11.12.2020 காலை 08.00 மணிமுதல் பணியில் இருந்தபோது தமிழ் நாடு பதிவு எண் கொண்ட சுற்றுளா வாகனம், பிற மாநில் பதிவு எண் கொண்ட லாரி மற்றும் சுற்றுளா வாகனங்களுக்கான Temporary Permit வழங்கியும், தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளின் கீழ் - 6 வழக்குகள் பதிவு செய்தும் அதற்கான வரி மற்றும் இணக்க கட்டணம் வசூல் செய்யப்பட்டும், 11.12.2020 ந்தேதி காலை 08.00 மணி முதல் 12.12.2020 விடியற்காலை 04.00 மணிவரையில் ரூபாய் 1,28,020/- வரை அரசிற்க்கான வருவாயாக வரி மற்றும் இணக்க கட்டணம் தற்காலிக வாகன உரிமம் போன்ற வகையில் வசூல் செய்யப்பட்டுள்ளது. 11.12.2020 காலை 08.00 முதல் இரவு 20.00 மணிவரையிலான தொகை ரூபாய் 60,930/- மற்றும் 11.12.2020 ந்தேதி இரவு 20.00 மணி முதல் 12.12.2020 ந்தேதி விடியற்காலை 04.00 மணிவரையிலான தொகை ரூபாய் 67,090/- ஐ திரு.ராம்கண்ணன் அவர்கள் வசம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேற்படி திருப்பி ஒப்படைக்கப்பட்ட தொகை நீங்கலாக கூடுதலாக ரூபாய் 88,000/- இருந்தது, அது குறித்து திரு.S.ராம்கண்ணன் அவர்களிடம் விசாரிக்க அவர் பதில் ஏதும் கூறாமல் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு வாகன

ஓட்டிகளிடம் லஞ்சமாக முறையற்ற வகையில் வசூல் செய்யப்பட்ட பணம் என்றும் உரிய கணக்கு தெரிவிக்காத மற்றும் உரிமை கோராத அப்பணம் ரூபாய் 88,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் 11.12.2020 பகல் மற்றும் இரவு வசூல் செய்யப்பட்ட அரசின் வருவாய் குறித்த விவரங்கள் அடங்கிய 5 தாள்கள் மற்றும் 4 தாள்கள் முறையே கைப்பற்றப்பட்டது. காட்பாடி போக்குவரத்து சோதனை சாவடி வருகைப்பதிவேடு-2020, பணியாளர்களின் கையிருப்பு தொகை பதிவேடு-2020, ரசீது வழங்கல் பதிவேடு-2020, Vehicle Inspection Book (Check Report) 19.11.2020 தேதியிட்ட பதிவேடு ஒன்றும் மற்றும் 12.12.2020 நாளிட்ட வரிசை எண். A1190753 வரை பயன்படுத்தப்பட்ட பதிவேடு ஒன்றும், மோட்டார் வாகன ஆய்வாளர் (தெ.நு.அ) திரு.S.ராம்கண்ணன், என்பவரது 01.12.2020 முதல் எழுதப்பட்டிருந்த நாட்குறிப்பின் சுருக்கம் பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. முன்னாள் படைவீரர்கள் கொடிநாள் -2019 ஆம் ஆண்டு நன்கொடை ரசீது புத்தகங்கள் கேட்டு பெற்று பார்வை செய்து அவை ஏதும் விற்பனை செய்யப்படவில்லை என்பதனை உறுதி செய்துக்கொண்டு திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனையில், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ) திரு.ராம்கண்ணன் மற்றும் தனிநபர் திரு.பாபு ஆகியோரிடமிருந்து தக்க முகாந்திரம் மற்றும் கணக்கு கூற இயலாத பணம் தலா ரூபாய் 3000/- ஆக மொத்தம் ரூபாய் 6000/- மற்றும் கணக்கு கூற இயலாத, உரிமை கோராத தொகை ரூபாய் ரூ.88,000/- ஆக மொத்தம் ரூபாய் 94,000/- மற்றும் ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 12.12.2020-ஆம் தேதி விடியற்காலை 04.00 மணிக்கு துவக்கி காலை 09.30 மணிக்கு முடிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் அனைத்தையும் இருதுறை திடீர்சோதனை செயல்முறை தயார் செய்து, அதில் நானும், திரு.ராம்கண்ணன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ) மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்து அதன் நகல் திரு.ராம்கண்ணன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ), போக்குவரத்து துறை சோதனை சாவடி, காட்பாடி,

வேலூர் மாவட்டம் அவர்களுக்கு வழங்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நடைபெறும் விதிமிறல்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் லஞ்சமாக பணம் வசூல் செய்தும் அரசின் வருவாய்க்கு இழப்பு ஏற்படுத்தும் வகையிலும், எவ்வித அரசின் உத்தரவோ அல்லது உயர் அதிகாரிகளின் உத்தரவு ஏதும் இல்லாமல் தனி நபர்களை பணிக்கு அமர்த்தி இடைதரகர்களாக செயல்பட அனுமதித்தும் அரசு ஆவணங்களையும் கோப்புகளையும் கையாள அனுமதித்து சட்டத்திற்கும் விதிகளுக்கும் எதிராக செயல்பட்டு வந்த திரு.ராம்கண்ணன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ), போக்குவரத்து துறை சோதனை சாவடி, காட்பாடி, வேலூர் மாவட்டம் மற்றும் திரு.பாபு (தனி நபர்) ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், இருதுறை திடீர் கூட்டு சோதனையில் கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம், கணக்கு கூற இயலாத மற்றும் உரிமை கோராத பணம் ரூ.94,000/-, கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் சோதனை சம்மந்தமான அசல் செயல்முறை ஆகியவற்றை நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். ஓம்/- xxxxxxxxxxx (S.ஜோதி) 12/12/2020 மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Received the complaint on 12.12.2020 at 17.30 hrs, Inspector Tr.S.Vijay to receive the complaint and register a case Sd/- xxxxxxxxxxx (K.S.HEMACHITHRA) 12.12.2020, DSP/VAC/Vellore.

Madam, received the complaint and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.19/2020, u/s. 7 and 12 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 12.12.2020 at 18.00 hrs. The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned. Sd/- xxxxxxxxxxx (S.VIJAY) 12/12/2020, Ins/VAC/Vellore.

(S.VIJAY) 12/12/2020
INS/V&AC/VLR.